செ.வெ.எண்: 76 நாள்: 28.01.2017

# பத்திரிகைச்செய்தி

தட்டம்மை மற்றும் ரூபெல்லா போன்ற நோய்களைத் தடுக்கும் விதமாக 9 மாதம் நிறைவடைந்த குழந்தை முதல் 15 வயது வரை உள்ள அனைத்து பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கும் சிறப்பு முகாம் நமது மாவட்டத்தில் பிப்ரவரி 6ம் தேதி முதல் நடைபெற உள்ளது.

இம்முகாம் முழு வெற்றியடைய மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மற்றும் நிறுவனர்களின் ஒத்துழைப்பு மிக இன்றியமையாததாகும். இம்முகாமினை எவ்விதம் சிறப்பாக நடத்துவது என்பது பற்றியும், இந்த தடுப்பூசி பற்றி எழும் சந்தேகங்களுக்கும், வினாக்களுக்கும் விளக்கம் தரும் வகையிலும் இம்மாவட்டத்திலுள்ள அனைத்து மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கும், நிறுவனர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மாவட்ட மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் அவர்களின் தலைமையில், புதுக்கோட்டையில் உள்ள மௌண்ட் சீயோன் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் 24.01.2017 அன்று விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அறந்தாங்கி, முதல்வர், மண்டல பொதுச் சுகாதாரத்துறை பயிற்சி நிலையம், திருவரங்குளம், உதவி இயக்குநர் (மா.சு.பு.மை), மாவட்ட தாய்சேய் நல அலுவலர், மாவட்ட பயிற்சிக் குழு மருத்துவர், அறந்தாங்கி மற்றும் மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி பற்றிய விபரங்கள் படக்காட்சிகள் மூலம் தெளிவாக விளக்கப்பட்டது. மேலும் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் எழுப்பிய வினாக்களுக்கும், சந்தேகங்களுக்கும் தெளிவான, விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டது. ஏதேனும் விளக்கங்கள் பெற விரும்பினால் தொடர்பு கொள்ளும் விதமாக தொடர்புடைய அலுவலர்களின் தொலைப்பேசி எண்களும் வழங்கப்பட்டன.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, தங்களது குழந்தைகளுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசியினை வழங்கி இந்நோய்களின் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்திட ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**